# அம்மைச்சி

## காட்சி—ஒன்று

இடம் : காஞ்சி தேரோடும் தெருவில் ஒரு வீடு.

நேரம் : காலை.

கதையுறுப்பினர் : பாவல்லாள் அம்மைச்சி, பார்ப்பான் பட்டாபிராமன்.

நடைமுறை : அம்மைச்சி தடுக்கில் உட்கார்ந்து கருத்தாக எழுத்தாணியால் ஏட்டில் எழுதிக் கொண்டிருக்கிறாள்.

பார்ப்பான் பட்டாபிராமவன பொன்னுடை போர்த்தி வைரக் கடுக்கண் முகத்துக்கு விளக்கேந்த மணப்பூச்சு தெரிவிக்க வந்து சேர்ந்தான்.

அம்மைச்சி : வருக! முன்னறிவிப்பு இல்லாமல் வந்தீர்கள். அப்படிப்பட்ட தேவை என்ன? வருக!

பட்டாபிராமன் : ஏது ஏது, உனக்கு முன்னறிவிப்பும் வேண்டுமோ? சரி சரி, நான் வந்தது எதற்கு? இதைக் கேள், நீ தொழில் செய்வதில்லையாம், சாதித் தொழிலை நிறுத்தலாமோ? இருக்கட்டும். என் நிலை உனக்குத் தெரியுமா? ஆத்துக்காரி இறந்துவிட்டாள், ஆறு திங்கள் ஆகின்றன. உன் நினைவு வந்தது பார்த்துப் போக வந்தேன். உனக்கு நல்ல வேளையாக இளமை மாறிப்

போய்விடவில்லை. அழகும் குறைந்து விடவில்லை, நீ என்னைப் பார்க்கிறாய், என்னைக் கிழவன் என்று எண்ண மாட்டாய், நான் அழகிலும் குறைந்தவன் அல்லேன் என்ன? பேசாமல் இருக்கிறாயே...!

அம் : தமிழுண்டு நானுண்டு, நான் வினவறிந்த நாள் முதல் கொண்டு! இனியும் தமிழுண்டு நான் உண்டு சாவுண்டு! அவ்வளவுதான். பிறகு...

பட் : என்னைப் போகவா சொன்னாய்?

அம் : சொன்னால் என்னாய்விடும்?

பட் : எண்ணத்தில் ஆழ்ந்துள்ள உனக்கு இடையூறு செய்ய வில்லையடி நான்.

அம் : எண்ணத்தில் ஆழ்ந்துள்ள என் எதிரில் நாயோடா நரியோடா?

பட் : ஊட்டுப் பாடலாம், நாட்டார் குளிக்கும் பொதுக் குளம்தானே நீ!

அம் : கேட்டுத் திருந்தலாம், துறையறியாது கெட்டொழி யும் துடுக்குவேண்டாம்.

பட் : அம்மைச்சி தாசி அவள்தொழிலை விட்டுவிட்டுச் செம்மைத் தமிழ்பாடச் சென்றதேன்?

அம் : உம்மனைவி

தங்கச்சி அக்காபெண் தாசிகளாய்க் கண்டார்க்கும் தங்கச்சு விற்பதனால் தான்.

(எனப் பட்டாபிராமன் முன்னிரண்டடி பாட அம்மைச்சி, தனிச் சொல்லையும் பின்னிரண்டு அடிகளையும் பாடி வெண்பாவை முடிக்கிறாள். இதில் தங்கச்சு என்பதற்குப் பொருள் தமது இரவிக்கை என்பது)

பட்டாபிராமன் சினத்தோடு வெளியே செல்கிறான்.

## காட்சி—இரண்டு

**இடம் :** ஷியூர்க் குளக்கரை

**காலம் :** மாலை 4—மணி

**கதையுறுப்பினர் :** பட்டாபிராமனும் பத்துப்பார்ப்பனர்களும்.

**நடைமுறை :** படித்துறையில் பத்துப் பேரும் அமர்ந்திருக்கப் பட்டாபிராமன் நின்றபடி அறிவிக்கின்றான்.

**பட் :** காலையில் அம்மைச்சி வீட்டுக்குப் போனேன்.

**ஒரு பார்ப்பனன் :** என்ன நடந்தது?

**பட் :** கர்மக்கனல் தணிய அந்தக் காவேரியில் மூழ்கினேன்.

**எல்லோரும் :** மகிழ்ச்சி! மகிழ்ச்சி!!

**பட் :** இன்பம் தந்தது மட்டுமல்ல, இருநூறு வெண்பொற் காசுகள் என் காலில் வைத்துக் கும்பிட்டாள், நான் உயர்ந்த குலத்தான் ஆதலால்..

**ஒருவன் :** மேலே?

**பட் :** நான் பெற்ற இன்பம் பெறுக என் இனத்தார்.

**எல்லோரும் :** மகிழ்ச்சி! மகிழ்ச்சி!!

## காட்சி—மூன்று

**இடம் :** அம்மைச்சி வீடு.

**நேரம் :** (மறுநாள்) காலை

**உறுப்பினர் :** அம்மைச்சி, திருப்புளி ஐயங்கார்.

**நடைமுறை :** அம்மைச்சி எழுதிக் கொண்டிருக்கிறாள். திருப்புளி சிரித்துக்கொண்டே உள்ளே நுழைகிறான்.

**திருப்புளி :** அம்மைச்சி, என்னைத் தெரியுமோ உனக்கு? நான் பரந்தாம ஐயங்கார் இளைய மகன்.

**அம் :** சரி, எங்கே, இங்கே?

**திரு :** உன்னிடம்தான் வந்தேன். பூவிடம் வண்டு வந்த தென்றால் காரணம் கேட்கவா வேண்டும்?

**அம் :** இது இரும்படிக்கும் இடமாயிற்றே, நாய்க்கு இங்கே வேலையில்லையே என்றேன்.

**திரு :** பாடிவிடு ஒன்று ஆடிவிடு தூர.

**அம் :** ஓடிவிடு விரைவில்! (என்று அதட்டிய அதட்டல் வெளியே தள்ளியது பார்ப்பனனை.)

## காட்சி—நான்கு

**இடம் :** ஜெயூர்க் குளக்கரை

**காலம் :** மாலை

**உறுப்பினர் :** பட்டாபிராமன், திருப்புளி முன் பதினொரு பேர்கள்.

**பத்துப்பேர் :** என்ன நடந்தது?

**திருப்புளி :** காமக்கனல் தணிய அந்தக் காவேரியில் மூழ்கிறேன். இருநூறு வெண்பொற் காசுகள் என் காலில் வைத்துக் கும்பிட்டாள்.

(இவ்வாறு திருப்புளி விட்ட கரடியின் பொருள் பட்டாபிராமனுக்கு மட்டும் தெரிந்திருக்கும். மற்றவர் நம்பினார்கள், கூட்டமும் கலைகிறது.)

## காட்சி—ஐந்து

(ஒரு திங்கட்குப்பின்)

**இடம் :** செங்குந்தர் தெரு, அந்தகக் கவி வீரராகவ முதலியார் வீடு.

**காலம் :** காலை

**உறுப்பினர் :** அந்தகக் கவி வீரராகவ முதலியார், பாவல்லாள் அம்மைச்சியம்மையார்.

**நடைமுறை :** கவிஞர் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருக்க அம்மைச்சியம்மையார் வருகிறார்.

அம் : ஐயா! அம்மைச்சி வணக்கம்.

வீர : வருக, அம்மையாரே, அணுகிய பார்ப்பனர் அனைவர்க்கும் உங்கள் செருப்படி கிடைக்கவே, அவர்கள் எல்லோரும் உங்களுக்குப் பெருந்தொல்லை விளைக்கக் கூடிக் கூடிப் பேசுகிறார்களாம். தேர் விழாவில் ஏதாவது நடக்கும் என்று சொல்லுகின்றேன். ஆயினும் அச்சப்படத் தேவையில்லை. அவர்கள் ஐந்நூறு பேர்; தமிழர் பல்லாயிரவர். நாம் தமிழர், எதற்கும் நம் நாட்டாண்மைக்காரரை நீங்கள் காணவேண்டும். நாம் நடந்ததையெல்லாம் கூறவேண்டும். அவர்கள் ஊருக்குப் போகவேண்டுமாம். இப்போதே தாங்கள் காணவேண்டும்.

அம் : சென்று திரும்பி வருகின்றேன் ஐயா, வணக்கம்.

## காட்சி—ஆறு

இடம் : தேரோடுந் தெரு

காலம் : தேரோடும் திருவிழா நாள், தேர் அம்மைச்சிவீட்டை அணுகும் நேரம்.

உறுப்பினர் : திருவிழாக் காண்போர், பார்ப்பனர், அம்மைச்சி அந்தகக் கவி.

நடைமுறை : தேர் அம்மைச்சி வீட்டில் ஏற்றப்பட்டதால் வீடு இடிகிறது. தமிழர்கள் கண்கள் எரிகின்றன. பார்ப்பனர் உதடுகள் சிரிக்கின்றன.

அம்மைச்சி :

பெருமாள் திருநாளைப் பேயாக்க என்றே
வருமாண்டு தோறுமிந்த மாண்பார்—ஒருநாளும்
மாக்குதிரை ஏற்றிய மாசணங்கள் ஆமணக்கஞ்
சாய்க்குதிரை ஏறினார் தாம்.

அந்தக்கவி :

பாப்புக் குரங்கைப் படையாகக் கூட்டிவந்தீர்
தேப்பெருமா ளேகச்சிச் செல்வரே—கோப்பமைந்த
கொம்மைக் சிகரலங்கைக் கோட்டைஎன்று
அம்மைச்சி வாழ்வாள் அகம். [கொண்டீரோ

முற்றும்

அம் : ஐயா! அம்மைச்சி வணக்கம்.

வீர : வருக, அம்மையாரே, அணுகிய பார்ப்பனர் அனைவர்க்கும் உங்கள் செருப்படி கிடைக்கவே, அவர்கள் எல்லோரும் உங்களுக்குப் பெருந்தொல்லை விளைக்கக் கூடிக் கூடிப் பேசுகிறார்களாம். தேர் விழாவில் ஏதாவது நடக்கும் என்று சொல்லுகின்றேன். ஆயினும் அச்சப்படத் தேவையில்லை. அவர்கள் ஐந்நூறு பேர்; தமிழர் பல்லாயிரவர். நாம் தமிழர், எதற்கும் நம் நாட்டாண்மைக்காரரை நீங்கள் காணவேண்டும். நாம் நடந்ததையெல்லாம் கூறவேண்டும். அவர்கள் ஊருக்குப் போகவேண்டுமாம். இப்போதே தாங்கள் காணவேண்டும்.

அம் : சென்று திரும்பி வருகின்றேன் ஐயா, வணக்கம்.

## காட்சி—ஆறு

இடம் : தேரோடுந் தெரு

காலம் : தேரோடும் திருவிழா நாள், தேர் அம்மைச்சிவீட்டை அணுகும் நேரம்.

உறுப்பினர் : திருவிழாக் காண்போர், பார்ப்பனர், அம்மைச்சி அந்தகக் கவி.

நடைமுறை : தேர் அம்மைச்சி வீட்டில் ஏற்றப்பட்டதால் வீடு இடிகிறது. தமிழர்கள் கண்கள் எரிகின்றன. பார்ப்பனர் உதடுகள் சிரிக்கின்றன.

அம்மைச்சி :

பெருமாள் திருநாளைப் பேயாக்க என்றே
வருமாண்டு தோறுமிந்த மாண்பார்—ஒருநாளும்
மாக்குதிரை ஏற்றிய மாசணங்கள் ஆமணக்கஞ்
சாய்க்குதிரை ஏறினார் தாம்.

அந்தக்கவி :

பாப்புக் குரங்கைப் படையாகக் கூட்டிவந்தீர்
தேப்பெருமா ளேகச்சிச் செல்வரே—கோப்பமைந்த
கொம்மைக் சிகரலங்கைக் கோட்டைஎன்று
அம்மைச்சி வாழ்வாள் அகம். [கொண்டீரோ

முற்றும்